**தூத்துக்குடி மாவட்டத்திற்கான வேளாண் வானிலை ஆலோசனை அறிக்கை**

**(மார்ச் 25-ம் தேதி முதல் மார்ச் 29-ம் தேதி வரை)**

**(வெளியீடு: வேளாண் வானிலை ஆலோசனை மையம், வேளாண்மை ஆராய்ச்சி நிலையம்,**
**தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், கோவில்பட்டி மற்றும் இந்திய வானிலை துறை)**

**முந்தைய வார வானிலை (20.3.15 - 23.3.15)**

| | |
|---|---|
| மழை (மி.மீ.) | 0.0 |
| அதிக பட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 30- 32 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 23- 25 |
| வானம் (ஆக்டா) | 3- 4 |
| ஈரப்பதம் (08:30 மணி) (சதவீதம்) | 88- 97 |
| ஈரப்பதம் (17:30 மணி) (சதவீதம்) | 70- 77 |
| காற்றின் வேகம் (கி.மீ. / மணி) | 7- 19 |
| காற்றின் திசை | 110- 140 |

**29.3.15 அன்று 08:30 மணியுடன் முடிவடையும் காலத்திற்கான வானிலை முன்னறிவிப்பு**

| வானிலை காரணிகள் | வானிலை முன்னறிவிப்பு | | | | |
|---|---|---|---|---|---|
| | நாள் 1<br>25.3.15 | நாள் 2<br>26.3.15 | நாள் 3<br>27.3.15 | நாள் 4<br>28.3.15 | நாள் 5<br>29.3.15 |
| மழை (மி.மீ.) | 0 | 0 | 3 | 3 | 8 |
| அதிகபட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 33 | 33 | 33 | 33 | 32 |
| குறைந்தபட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 25 | 25 | 25 | 25 | 25 |
| வானம் (ஆக்டா) | 2 | 3 | 5 | 5 | 6 |
| ஈரப்பதம் (சதவீதம்) | 70- 85 | 70- 87 | 75- 90 | 78- 92 | 80- 93 |
| காற்றின் வேகம் (கி.மீ. / மணி) மற்றும் திசை | 12/ தென்கிழக்கு | 12/ தென்மேற்கு | 15/வடகிழக்கு | 14/ வடகிழக்கு | 10/ கிழக்கு |

வரும் தினங்களில் எதிர்பார்க்கப்படும் மிதமான மேகமூட்டம், இலேசான மழை மற்றும் மிதமான ஈரப்பதம் கொண்ட வானிலைக்கேற்ற வேளாண் வானிலை ஆலோசனைகள்

| பயிர் / சாகுபடி சூழல் | பருவம் /சாகுபடி செயல்கள் | வேளாண் வானிலை ஆலோசனை |
|---|---|---|
| பருத்தி<br>மிளகாய் | முதிர்ச்சி பருவம் | வரும் தினங்களில் இலேசான மழை எதிர்பார்க்கப்படுவதால் அறுவடை செய்யப்பட்ட பருத்தி மற்றும் மிளகாயை பாதுகாப்பான இடத்தில் சேமிக்கவும். |
| கரும்பு | தூர்கட்டும் | தூர்கட்டும் பருவத்திலுள்ள கரும்புக்கு ஊட்டச்சத்துக்களை சொட்டு |

| | | |
|---|---|---|
| | பருவம் | நீர்ப்பாசனம் மூலம் அளிக்கவும். நட்ட 210 - ம் நாள் வரை சொட்டு உரநீர்ப்பாசனம் அளிக்கலாம். ஒவ்வொரு முறையும் சொட்டு உரநீர்ப்பாசனம் அளிக்கும்போது 25 கிலோ தழைச்சத்து மற்றும் 8 கிலோ சாம்பல் சத்து என்ற அளவில் யூரியா மற்றும் வெள்ளை பொட்டாஷ் மூலமாக அளிக்கவும். |
| வாழை | வளர்ச்சி பருவம் | வரும் தினங்களில் வறண்ட வானிலை எதிர்பார்க்கப்படுவதால் 12 வாரங்கள் வயது கொண்ட வாழைக்கு மரம் ஒன்றுக்கு 12 லிட்டர் தண்ணீரை சொட்டு நீர்ப்பாசனம் மூலம் அளிக்கவும். |
| கத்தரி | பூக்கும் பருவம் | வரும் தினங்களில் எதிர்பார்க்கப்படும் வானிலையில் கத்தரியில் தண்டு மற்றும் காய்த்துளைப்பானின் தாக்குதல் ஏற்பட வாய்ப்புகள் உள்ளன. இதனை கட்டுப்படுத்த பாதிக்கப்பட்ட தண்டுப்பகுதிகளை அகற்றவும். கார்பரில் 2 கிராம்/ லிட்டர் + நனையும் கந்தகம் 2 கிராம்/ லிட்டர் என்ற அளவில் தெளிக்கவும். |
| தக்காளி | காய்க்கும் பருவம் | தக்காளியில் காய்க்கும் பருவம் முக்கியமான பருவமாதலால் ஊட்டச்சத்துக்களை சொட்டு நீர்ப்பாசனம் மூலம் அளிக்கவும். 12- 61- 0 உரம் 1.14 கிலோ/ எக்டர், 13- 0- 45 உரம் 6.17 கிலோ/ எக்டர் மற்றும் யூரியா 2.8 கிலோ/ எக்டர் என்ற அளவில் பாசன நீருடன் சேர்த்து அளிக்கவும். |
| கால்நடை பராமரிப்பு | குடற்புழு நீக்கம் மற்றும் நோய் மேலாண்மை | ஆடுகளுக்கு தேவையான குடற்புழு நீக்க மருந்தினை கொடுக்கவும். புறக்கடை கோழிகளுக்கு வெள்ளை கழிசல் நோய் (இராணிகட்) தடுப்பூசி போடவும். |

குறுஞ்செய்தி- மழை: மார்ச் 27- 29 வரை முறையே 3, 3& 8 மி.மீ. ஆடுகளுக்கு தேவையான குடற்புழு நீக்க மருந்தினை கொடுக்கவும். புறக்கடை கோழிகளுக்கு வெள்ளை கழிசல் நோய் (இராணிகட்) தடுப்பூசி போடவும்.

பேராசிரியர் மற்றும் தலைவர்
வேளாண்மை ஆராய்ச்சி நிலையம்
கோவில்பட்டி